விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், மேல்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. A.மூர்த்தி

தீர்மானம் எண்:57

நாள் : 10.06.2024

பொருள்: உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு – விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம் வட்டம் – ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம்– மேல்பாக்கம் கிராம – சர்வே எண்கள்.180/4C, 192/1C இடத்தில் ஏக்கர் 7.74 செண்டில்– அமைந்துள்ள காலேஜ் கார்டன் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப இறுதி ஒப்புதல்–வழங்குதல் குறித்து.

பார்வை:
1) மனுதாரர் திரு.R.சங்கர்கணேஷ் மற்றும் திரு.K.பெரோஸ்கான்அவர்களின் விண்ணப்ப நாள். 07.02.2024
2) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்
3) மாவட்ட நகர் ஊரமைப்புப உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம், அவர்களின் கடிதம் இணையதள வாயிலாக ROC No.ZATRT963/2024/TCP நாள்.26.04.2024.
4) சார்பதிவாளர், பதிவுத்துறை, சார்பதிவாளர் அலுவலகம், அவரபாக்கம், ஆவண எண்.1240/2024, நாள். 03.04.2024.
5) கூராய்வு கட்டணம் செலுத்து ரசீது பயன் மாற்று கட்டணம் செலுத்தது ரசீது. நாள். 10.06.2024.

உத்தரவு :

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு – விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம் வட்டம் – ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம்– மேல்பாக்கம் கிராம – சர்வே எண்கள்.180/4C, 192/1C இடத்தில் ஏக்கர் 7.74 செண்டில்– அமைந்துள்ள காலேஜ் கார்டன் குடியிருப்பு மனைப்பிரிவு, இறுதி ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை (2) மற்றும் (3)–ல் சுட்டியபடி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டுள்ளது. பார்வை (4)–ல் சுட்டியபடி சாலை, மூலை முடக்கு மற்றும் பொது ஒதுக்கீடுகளை தான பத்திர ஆவண எண்.1240/2024 – நாள். 03.04.2024. உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பார்வை (3)-ல் சுட்டியபடி பார்வை (5)-ல் சுட்டியபடி கூராய்வு கட்டணம் மற்றும் நில பயன் மாற்று கட்டணம் செலுத்தப்பட்டு உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட இறுதி ஒப்புதல் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப் படுகிறது. இணையதளம் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு மேற்படி மேல்பாக்கம் ஊராட்சி மன்ற தீர்மான எண். என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் மற்றும் ஒப்புதல் ஆணை நகல் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

உள்ளாட்சியின் இறுதி ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப் பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் நில அளவை துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும், அனுப்பிவைக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

1). மனைப்பிரிவுகள் சாலைகள் அனைத்தும் மனைப்பிரிவு வரைபடத்தின்படி உள்ளாட் சட்டங்களின் படி சம்மந்தப்பட்ட ஊராட்சி அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும் பொது துறையில்இருந்து ( Public Road ) மனைப்பிரிவு அமையும் இடம் வரை அணுகுசாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப்பகுதியை, உள்ளாட்சி தனது பொறுப்பில் எடுத்துக் கொள்ளும்.

2). மனைப்பிரிவு வரைபடத்தின் மனைப்பிரிவு சாலையும் OSR மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் இருப்பின் அதனையும் மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தானப்பத்திர நகலுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு அனுப்பி வருவாய் ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

3). நகர் ஊரமைப்பு அனுமதி வழங்கபட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் அலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.

4). சாலையின் இருபுறங்களிலும் 10 அடி தூரத்திற்கு ஒன்று மரம் நட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

5). மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் இந்த உத்தரவு எப்போது வேண்டுமானாலும் ரத்து செய்யப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் மேல்பாக்கம் கிராம - சர்வே எண்கள்.180/4C, 192/1C இடத்தில் ஏக்கர் 7.74 செண்டில்-அமைந்துள்ள **காலேஜ் கார்டன்** உத்தேச குடியிருப்பு சாதாரண வகை மனைகள். 176 (மனை எண்கள். 1 முதல் 176 வரை) மனைகளுக்கு **காலேஜ் கார்டன்** என்னும் பெயருடன் மேல்பாக்கம் ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

இணைப்பு

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

A. [signature]
10-6-2024

ஊராட்சி மன்ற தலைவர்,
மேல்பாக்கம் ஊராட்சி,
ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம்,
விழுப்புரம் மாவட்டம்.

பெறுநர்.

திரு.R.சங்கர்கணேஷ் த/பெ ராமனுஜம் முதலியார்
மற்றும் திரு.K.பெரோஸ்கான் த/பெ கபூர்கான்,
நெ.10,11, காந்தி தெரு,
கோலஸ் நகர்,
புதுச்சேரி.

நகல்:-

1.உதவிஇயக்குநகர்/ஊராட்சிகள், விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்படுகிறது.

2.உதவிஇயக்குநகர் ஊரமைப்பு அலுவலகம், விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்படுகிறது.

3.சார்பதிவாளர், சார்பதிவபளலட அலுவலகம் அவரப்பாக்கம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்படுகிறது.

4.வட்டாட்சியர், திண்டிவனம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்படுகிறது.